**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

2025ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.ரமேஷ் | **PW–19** | தொழில் | – |
| த/க பெயர் | –பெரியசாமி | | வயது | – 37 |
| கிராமம் | – | | | |
| தாலுக்கா | – | | | |

**(20–ம் எதிரி ஆஜர், 2 முதல் 4, 6 முதல் 26, 28 முதல் 30–ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கோவையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2013 ஆம் ஆண்டு நான் சென்னையில் வேலை பார்த்து வந்தேன். நான் கோவை அண்ணா யுனிவர்சிட்டியில் B.E பட்டப்படிப்பு 2010 ஆம் ஆண்டு படித்து முடித்தேன். 2013 ஆம் ஆண்டு நான் சென்னை திருவான்மியூரில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். அவ்வாறு நான் சென்னையில் தங்கி வேலை பார்த்து வந்தபோது என்னுடன் ஒரே ரூமில் சுரேஷ் என்பவரும் தங்கி இருந்தார். சென்னையில் நான் வேலை பார்த்து வந்த சமயம் எனது அக்கா விஜயா எனக்கு போன் மூலம் கோவை சிபிசிஐடி போலீஸ் அவரை போனில் அழைத்ததாகவும், என் அக்காவின் 10th, 12th மற்றும் டிகிரி சர்டிபிகேட் அவர்களிடம் ஒரு வழக்கு சம்பந்தமாக விசாரணையில் இருப்பதாகவும் சொல்லியதாக என்னிடம் கூறினார். நான்

என் அக்காவிடம் அவர்களிடம் எப்படி உன் சர்டிபிகேட் போனது என்று கேட்டேன். அப்போது அவர் தன் சர்டிபிகேட் தொலைந்து விட்டதாகவும் அதற்கு ஊரில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும் சொன்னார். நான் என் அக்காவுடன் கோவையில் உள்ள சிபிசிஐடி காவல் நிலையத்திற்கு சென்றேன். அவர்கள் எங்களிடம் விளக்கம் கேட்டார்கள். நாங்கள் சர்டிபிகேட் தொலைந்த விபரமும், அது குறித்து புகார் கொடுத்திருக்கும் விபரமும் அவர்களிடம் சொன்னார். சிபிசிஐடி போலீஸ் பின்னிட்டு வந்து அவர்கள் சொல்லும் சமயம் சர்டிபிகேட்டை பெற்றுக்கொள்ள சொன்னார்கள், அதனால் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். என் அக்கா என்ன படித்துள்ளார் என்றால் B.A., B.Ed., முடித்துள்ளார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் **அ.சா.ஆ.54** (1 முதல் 4 வரிசை) சான்றிதழ்கள் என் அக்கா உடையது தான். ஆஜர் எதிரியை எனக்கு யார் என்று தெரியாது. நான் அவரை இதற்கு முன் பார்த்ததில்லை. சிபிசிஐடி போலீஸ் எங்களை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலீஸ் என்னை விசாரித்த போது சுரேஷ் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு அடையாறில் உள்ள நான் வேலை பார்க்கும் நிறுவனத்திற்கு செல்லும் வழியில் ஆஜர் எதிரி ஸ்ரீதர் ராஜ் (A – 20) ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அந்த விபத்தில் எதிரியின் வாகனத்திற்கு சேதங்கள் ஏற்பட்டது என்றும், அவர் அந்த சேதத்திற்கு ரூபாய் 2000/- பணம் கேட்டார் என்றும், அப்போது என்னிடம் பணம் இல்லாத காரணத்தினால் என்னுடைய மொபைல் போன் எண்ணை அவர் வாங்கிக் கொண்டார் என்றும், பிறகு அவர் என்னை தொடர்பு கொண்ட போது நான் ரூபாய் ஆயிரம் மட்டும் அவரிடம்

கொடுத்தேன் என்றும், மேலும் அவரிடம் என்னுடைய குடும்ப சூழ்நிலையை சொன்னேன் என்றும், மேலும் அவர் என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு டிஎன்பிஎஸ்சி குரூப் - 2 தேர்வுக்கான வினாத்தாள் தன்னிடம் உள்ளது என்றும், பணமோ, சான்றிதழோ கொடுத்தால் வினாத்தாளை தருவதாக சொன்னார் என்றும், அந்த சமயம் எனது அக்கா விஜயாவுக்கு இந்த தகவலை சொன்னேன் என்றும், என்னுடைய அக்கா தனது SSLC, HSC, B.Ed., மற்றும் B.A., சான்றிதழ்களை என்னிடம் தந்தார் என்றும், நான் அதைப் பெற்று ஸ்ரீதர் ராஜிடம் கொடுத்தேன் என்றும், மேலும் ஸ்ரீதர் ராஜ் என்னை தொடர்பு கொண்டு சென்னைக்கு அக்காவை அழைத்து வரச் சொன்னார் என்றும், ரூபாய் 5 லட்சம் கொடுத்து அசல் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னார் என்றும், போலீஸ் விசாரணையில் நான் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை எனக்கு யார் என்று தெரியாது என்றும், மேலும் ஆஜர் எதிரி என்னிடம் தொடர்பு கொள்ளவில்லை என்றும், சென்னையில் வைத்து எனக்கு சாலை விபத்து ஏதும் ஏற்படவில்லை என்றும், என் அக்கா உடைய சான்றிதழ்கள் தொலைந்து விட்டதாகவும், அது தொடர்பாக காவல் நிலையத்தில் என் அக்கா புகார் கொடுத்து இருப்பதாகவும், எதிரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4, 6 முதல் 11, 14, 15, 17, 18, 19, 21 முதல் 26, 28, 29, 30-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**